நூலகம்
யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 30 வெள்ளிக்கிழமை (15-08-1997) UTHAYAN A lively National Tamil Daily ஒளி: 251


# கடற்படையினரும் புலிகளும் முல்லைக் கடலில் கடும்சமர்!

## 3 மணி நேரம் நீடிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 15

முல்லைத்தீவுக் கடலில் இலங்கை கடற்படைக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை கடும் மோதல் ஏற்பட்டது. புல்மோட்டைக்கும் அலம்பிலுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த மோதல் 3 மணி நேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலின் போது கடற்படைப் பீரங்கிப்படகு ஒன்று இலேசான சேதம் அடைந்ததாகவும் —

புலிகளின் இருபடகுகள் மூழ்கடிக்கப்பட்டன என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

முல்லைத்தீவில் இருந்து சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் எட்டுப்படகுகளை கடற்படையினர் முல்லைத்தீவுக்கும் — அலம்பிலுக்கும் இடையில் வழி மறித்து தாக்கியதையடுத்து மோதல் மூண்டதாக புலிகளின் தரப்பில் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப சூடு கண்ட பூனை... எண்டு சொல்லுங்கோவன்.

## பூலான்தேவி சத்தியாக்கிரகம்

புதுடில்லி, ஒக. 15

தனக்கு எதிரான வழக்குகளை மீள ஆரம்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கொள்ளைக்காரியுமான பூலான்தேவி புதுடில்லி நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன்னால் நேற்று சத்தியாக் கிரகம் ஆரம்பித்தார். (இ-3)

## ஜின்னா சமாதி அருகே பாரிய குண்டு வெடிப்பு!

### நவாஸ் ஷெரீப் தப்பினார்

கராச்சி, ஒக. 15

பாகிஸ்தானின் சிற்பி எனக் கூறப்படும் ஜின்னாவின் சமாதி அருகே நேற்று பாரிய குண்டு ஒன்று வெடித்தது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், ஜனாதிபதி பாரூக் லிஹாரி ஆகியோர் ஜின்னா சமாதி அருகே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய சிறிது நேரத்தில் இந்தக் குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டனர் எனவும் குண்டு வெடித்த இடத்தில் பெரும் தீச்சுவாலை எழுந்துள்ளதாகவும் நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (இ-10)

# இலங்கையின் உள்நாட்டுப் போரில் இந்தியா மீண்டும் தலையிடாது

## படித்த பாடம் போதும் என்கிறார் குஜ்ரால்

சென்னை, ஒக. 15

"இலங்கையில் அரசாங்க துருப்புகளுக்கும், புலிகளுக்கும் இடையில் நடக்கும் உள்நாட்டுப்போரில் இந்தியா மீண்டும் தலையிடாது"

இந்தியப் பிரதமர் குஜ்ரால் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்படுவது குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்தியா ஒரு தடவை இலங்கையில் உள்விவகாரத்தில் தலையிட்டு பாடம்படித்தது போதும் 1987 ஆம் ஆண்டு முதல் 90 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வடக்கு - கிழக்குப்பகுதியில் இந்திய அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்ட போது நூற்றுக்கணக்கான இந்திய வீரர்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் போனார்கள் என்றும் அவர் கூறினார்.

## கச்சதீவுக் கடலில் மீன் பிடிக்க புதிய கொள்கை வகுக்கப்படும்

புதுடில்லி, ஒக. 15

கச்சதீவுக் கடற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கவும், வியாபாரம் செய்யவும் வகை செய்யும் விதத்தில் கொள்கை ஒன்றை வகுத்துக் கொண்டிருப்பதாக இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் தெரிவித்தார்.

இந்திய மீனவர் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்து நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதற்கு யார் காரணம் என்று உறுதி செய்ய முடியவில்லை.

இதற்கு புலிப் போராளிகளும், இலங்கைக் கடற்படையினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (இ-3)

## சென்னையில் வெடி பொருள்

சென்னை, ஒக.15

சென்னைப் புறநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் பெருமளவிலான வெடி பொருள்களை தமிழ்நாடு பொலீஸார் கைப்பற்றினர்.

சுமார் 30 ஆயிரத்து 650 ஜெலற்றின் குச்சிகள் 28 ஆயிரம் டெட்டனேற்றர்கள், 18 ஆயிரம் மின்னணு டெட்டனேற்றர்கள் சுமார் ஆயிரத்து 100 மீற்றர் வயர் ஆகியவை இவற்றுள் அடங்கும்.

# விசாரணைக் குழு முன் நேற்று 19பேர் மட்டுமே சாட்சியமளித்தனர்

## அழைக்கப்பட்டோரில் பலர் சமுகமளிக்கவில்லை

குடாநாட்டில் கைதாகி காணாமற்போனோர் தொடர்பான விசாரணை நேற்று இரண்டாவது நாளாக பலாலியில் ஆரம்பமான போது 17 பேர் மட்டுமே அங்கு சமுகமளித்து சாட்சியம் அளித்தனர்.

அதற்கு முதல் நாளான புதன்கிழமை 39 பேர் சாட்சியம் அளித்தனர்.

13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி திகதி வரை தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெறும் இந்த விசாரணைக்கு தினமும் 60 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

சாட்சியம் அளிக்கத் தவறியோர் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் சாட்சியம் அளிக்கலாம் என்றும் —

அவர்கள் அப்பொழுதும் விசாரணைக்குச் சமுகம் அளிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் சம்பந்தப்பட்ட கைதானோர் விடுவிக்கப் பட்டவர்களாகக் கருதப்படு[illegible] ணைக் குழுவினர் தெரிவித்தனர். (இ-3-5)

## அரச தலைவரின் வாசஸ்தலம் புலிகளால் தாக்கப்படலாம்

### இடம் மாற்றுவது குறித்து இந்திகா

கொழும்பு, ஒக. 15

அரசாங்கத் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்று பிரான்ஸ், இந்தியா அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் ஆலோசனை தெரிவித்திருந்தனர். இதனை அடுத்தே கோட்டே ஜெயவர்த்தனாபுரவுக்கு இதனை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வீடமைப்பு அமைச்சர் இந்திகா குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோட்டேயில் இதனை அமைப்பதற்கு அரசாங்கம் மேலதிக நிதி ஒதுக்கத் தேவையில்லை. அது தற்சமயம் அமைந்துள்ள இடத்தை விற்பதன் மூலம் அதற்கான நிதியைப் பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

## நேரியகுளம் கிராமத்தின் பெயர் ஜயசிங்கபுர என மாற்றம்!

வவுனியா, ஒக. 15

வவுனியா மாவட்டத்தில் உள்ள பூர்வீக தமிழ்க் கிராமமான நேரியகுளம் "ஜயசிங்கபுர" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழ் மக்களின் பூர்வீக தமிழ் கிராமங்களுக்கு சிங்களப் பெயர் சூட்டும் அரசின் நடவடிக்கையில் ஓர் அங்கமே இந்த பெயர் மாற்றம் என்று தெரிவிக்கப்பட்டது.

பறையனாளங்குளம் என்ற தமிழ்க் கிராமம் 'சப்புமல்புர' என்று முன்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டபோது எதிர்ப்புக் கிளம்பியது.

ஆனால் அந்தப் பெயர்ப் பலகை இப்போதும் அங்கு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-164)

## கூட்டணி பிரமுகருக்கு பிணை!

திருகோணமலை ஒக. 15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை கிளைத்தலைவர் செ. ஈழத்துநாதன் நேற்று திருகோணமலை நீதிவானால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் பொலீஸாரால் நேற்று திருமலை நீதிவான் சொர்ணராஜ் முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவரை சரீரப்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் அடுத்தமாதம் 9-ஆம் திகதி ஆஜராகுமாறு பணித்தார். (இ-3-150)

## கப்பலில் முன்னுரிமை

திருகோணமலையில் நடந்த விளையாட்டுப் போட்டிகளுக்குச் சென்று கப்பல் வசதியின்றி அங்கு தங்கியுள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் மன்னார் ஊடாகக் கப்பலில் யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
# செயற்குழுக் கூட்டம்

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 16-08-97 சனிக்கிழமை பி. . 4.00

செயற்குழு அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

ஐ. தங்கேஸ்வரன்
செயலாளர்

(சி/1323)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமணி இராமு

நாவாந்துறையைச் சேர்ந்த திருமதி பூமணி இராமு 14-8-97 அன்று காலமானார் இவர் காலஞ் சென்ற இராமுவின் அன்பு மனைவியும், அருமை நாயகம், கண்ணுச்சாமி, கனகரத்தினம், கமலம், செல்வதியம்மா, காலஞ் சென்ற சின்னராஜா ஆகியோரின் சகோதரியும். குணரட்ணம், சுப்பிரமணியம், சகுந்தலாதேவி, விமலாதேவி, காலஞ் சென்றவர்களான சிவலிங்கம், தர்மகுலசிங்கம், நிர்மலா்த்தனி ஆகியோரின் அன்புத்தாயாரும். மனோன்மணி, பத்மாதேவி, வனஜா, தேவரஞ்சனி பாக்கியநா..ன், குணசேகரம் ஆகியோரின் அன்புமாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-8-97 காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குணரெட்னம்
(மகன்)

70/3, கடற்கரை வீதி,
நாவாந்துறை, (49014)

## கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

**(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர், அச்சுவேலி வடக்கு)**

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை 14-08 97 வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற கோணேஸ்வரியின் அன்புக் கணவரும், உதயகுமார் (சுவிஸ்). திருமதி உதயராணி (ஆசிரியை, அச்சுவேலி ம. வி.), உதயதாஸ் (சுவிஸ்), விஜயதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வே. பாலசுப்பிரமணியம் ( அதிபர், யா/ வைதடி முத்துக்குமாரசாமி ம. வி.), மலர்மதி (சுவிஸ்), ஜெயசுதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், அங்குசன், பிரணவி, வேதிகா, கௌசிகன் ஆகியோரின் பேரனும். காலஞ் சென்ற செல்லப்பா (மலேசியா) மற்றும் செல்லம்மா, திரவியம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-8-97 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. பாலசுப்பிரமணியம்.
(மருமகன்)

மகாவித்தியாலய ஒழுங்கை,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (49016)

## திருமதி ஞானமமா காசிப்பிள்ளை

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவரான திருமதி ஞானம்மா காசிப்பிள்ளை 8-08-97 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செ. காசிப்பிள்ளையின் (பிரபல வர்த்தகர்) அன்பு மனைவியும், சசிகுமாரன் (கனடா), நந்தகுமாரன் (மங்கை ஸ்ரோரீஸ்), சிவனேஸ்வரி, புஸ்பவதி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜெ..தீஸ்வரி (கனடா), இராசமலர், பாலசுப்பிரமணியம், கணேஸ் (முதன்மை ஆசிரியர், கோட்டக்கல்வி அலுவலகம் கோப்பாய்) ஆகியோரின் மாமியாரும், தரு..ன் (கனடா), தயருபன் (கனடா), கிருபன் (கனடா), கர்ஷின் (கனடா), கோகுலன், குகதாசன் (லண்டன்), மங்கை (உடுவில் மகளிர் கல்லூரி 1998 A/L), சுகாசினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), தர்சனா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), தயாரூபி (கனடா), தயாநிதி, தயாளினி, பாமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஆண்டு 9 மாணவி), பிரியதர்ஷன் (லண்டன்), பிரியலதன் (ஜேர்மனி), பிரதீபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி 99 A/L), சர்மிளா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சுபோசினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆண்டு 8 மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றெஜீசன், அருணியா ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்றவர்களான நேசம்மா, இராசம்மா, செல்லம்மா, அழகம்மா, அப்புத்துரை, மனோரஞ்சிதம், வசந்தராஜா மற்றும் யோகேஸ்வரி (உரும்பிராய் வடக்கு), புனிதவதி (மலேசியா) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15-8-97 பிற்பகல் 3 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இலங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கா. நந்தகுமாரன் (மகன்)
(மங்கை ஸ்ரோரீஸ்)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (49015)

## பயிற்சி நெறி

தென்மராட்சி, ஓக. 15

வடக்கு—கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவின் ஆதரவுடன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர், கணக்குப்பதிவாளர், கணக்கு எழுநர்களுக்கான பயிற்சி நெறிகள் நாளையும், நாளை மறுதினமும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நாளை யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மி. வி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும் பயிற்சி நெறிக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

நாளை மறுதினம் யாழ். உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட ஆய்வு அலுவலர் ப. பரம்சோதி தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் பயிற்சி நெறியில் யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார்.

(இ-117)

### எமது
### புதிய வெளியீடுகள்

Dr. ராஜசேகர், மதுபாலா
**யாருக்கு மாப்பிள்ளை யாரோ**
ரகுமான், லாவன்யா
**பாட்டுப்பாடவா**

வீடியோ |C. D பிரதிகளை நேரடியாக C. D யிலிருந்து பதிவு செய்து கொடுக்கப்படும்.

**சுப்பஸோ வீடியோ,**
யாழ்ப்பாணம்.
(சி/1324)

## பரீட்சார்த்திகள் கவனத்துக்கு

1996 ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகள், மொத்தப் புள்ளிகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் சுட்டெண், பெயர், விலாசம் போன்ற விவரங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் மண்டப இல —2, கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டப இல—3 ஆகிய பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றிய பெறுபேறு, மொத்தப் புள்ளி கிடைக்காத பரீட்சார்த்திகளையே விவரங்களை சமர்ப்பிக்குமாறுகோரப்பட்டுள்ளது

# நன்றி நவிலல்

மலர்வு:
10
—
04
—
1932



உதிர்வு:
25
—
07
—
1997

## பொன். இராஜகோபால்

(முதுபெரும் பத்திரிகையாளர்; ஆசிரியபீடப் பணிப்பாளர் - தினக்குரல், முன்னாள் ஆசிரியர்- வீரகேசரி வார வெளியீடு)

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று கொழும்பு, கொள்ளுப்பிட்டி செண்ட் இல்டாஸ். லேன், 19 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறுகின்றன.

எமது குடும்ப ஒளிவிளக்காகத் திகழ்ந்த எமது தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து இரங்கல் தெரிவித்தோருக்கு , துர்க்காதேவி தேவஸ்தானம், யாழ். சென். சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பத்திரிகைகளில் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், கடித மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்:

மனைவி: லூமினா இராஜகோபால்
மகன்மார்: அருள் நாவலன், நிலவனன்
மற்றும் குடும்பத்தினர்.

56/18, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (49005)

உ



ஏழாலை வசந்தபுரம் களவாவோடை
அருள் விளங்கும்

## வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

# லட்சார்ச்சனைப்பூர்த்தி பெருவிழா

**(16-08-1997) சனிக்கிழமை**

**அம்பிகை அடியார்களே!**

கேட்டவற்கு, கேட்டவரம் கொடுத்தும் அடியார்களின் துன்பம் துடைத்தும் அல்லலுறும்போதும் அவர்கள் பிணி தீர்த்தும் அவர்களுடன் கலந்துரையாடி அருள் மொழிபேசியும், கலியுகத்தெய்வமாகிய நடமாடும் தெய்வத்தின் பூசையை ஏற்று அருள் பெருகிவரும் அன்னை நாகபூஷணிக்கு எதிர்வரும் 16-08-1997 சனிக்கிழமை லட்சார்ச்சனைப் பெருவிழா நிறைவு பெற திருவருள் கைகூடி உள்ளது அன்பர்கள் அனைவரும் கலந்து அன்னை அருள் பெறுக:

## நிகழ்ச்சிகள்

காலை 09-00 மணி: 1008 சங்காபிஷேகம்
10-00 மணி: பூசை
12-00 மணி: சுவாமி வீதிவலம் வருதல்
01-00 மணி: அன்னதானம்

அன்னை வசந்தகுமாரியின் ஆசியுடன் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுபவர்கள்:

சிவஸ்ரீ தி. கெங்காதரக்குருக்கள் (பிரதமகுரு) புன்னாலைக்கட்டுவன்
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (காயத்திரிபீடம்) இணுவில்
திரு. வ. குமாரசாமி ஐயா (காயத்திரிபீடம்)

பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பவர்:

ஆலய அறங்காவலர் திருவாளர் மா. நித்தியானந்தம் அவர்கள்

பெருவிழாவால் அனைவருக்கும் சுபமங்களம் உண்டாகட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

★ குறிப்பு: அன்றைய தினம் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கான அத்திவாரம் வெட்டும் நிகழ்வு இடம்பெறும்.

வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

களவாவோடை,
ஏழாலை. (49009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★யாழ். பொது நூலகத்தில்

# 28 ஆயிரம் நூல்கள் காணாமற் போயின!

தென்மராட்சி, ஒகஸ்ட் 15

குடாநாட்டில் இடம் பெற்ற 'சூரியப்பிரகாசம் - 1' இராணுவ நடவடிக்கையின் போது யாழ். பொது நூலகத்தில் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான 28 ஆயிரம் நூல்கள் காணாமற் போயுள்ளன.

யாழ். நகரில் அமைந்திருந்த யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டபோது 97 ஆயிரம் நூல்கள் எரிந்து சாம்பராகின. அதன் பின்னர் பொதுமக்களிடம் இருந்து சேகரித்தும், யாழ். மாநகர சபையால் கொள்வனவு செய்யப்பட்டும் சுமார் 85 ஆயிரம் நூல்கள் பாவனையில் விடப்பட்டிருந்தன.

இவற்றில் 28 ஆயிரம் நூல்களே வலிகாமம் இடப்பெயர்வின் போது காணாமற் போயிருப்பதாக யாழ். மாநகர சபை பிரதம நூலகர் தெரிவித்தார். கடந்த சில காலமாக யாழ். பொது நூலகம் மாநகர சபையின் நல்லூர் வளாகத்தில் இயங்கி வந்தது.

பொது நூலகத்துக்கு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# நல்லூர் பிரதேச சபைப்பகுதியில் வீதிகளைத் திருத்த நிதி உதவி

திருநெல்வேலி, ஓக. 15

நல்லூர் பிரதேச சபைப் பகுதியிலுள்ள வீதிகளைத் திருத்துவதற்கு பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நல்லூர் பிரதேச செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதேச சபைப் பகுதியிலுள்ள தாய்-சேய் சிகிச்சை நிலையங்களுக்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு 50 ஆயிரம் ரூபாவும், கொல்களம் அமைப்பதற்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-185)

# வாய்க்கால் துப்புரவுப் பணி

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோலங்காமம் கிணறு-வாய்க்கால் எதிர்வரும் மாரி காலத்துக்கு முன்பாக துப்புரவு செய்யப்பட உள்ளது.


துப்புரவாக்கும் பணியினை மானிப்பாய் வடக்கு விவசாயிகள் சம்மேளனம் பொறுப்பேற்றிருக்கின்றது.

மேற்படி பணிக்கென 98 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் செயலகத்தில் நடைபெற்ற விவசாய ஆலோசனைப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் வே.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாதகல் பாலம் சேத மடைந்து திருத்தப்பட்ட போதிலும், மீண்டும் அது சேதமடைந்துள்ளதனால் மாரிகாலம் தொடங்க முன்னர் அதனைத் திருத்த வேண்டும் என விவசாய சம்மேளனம் சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. விரைவில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. (ஐ-152)

# நல்லூர் முருகனுக்கு எழில்சேர் தெற்குவாயில்



நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சரித்திரப் பிரசித்தி பெற்றது. கண்கண்ட தெய்வமான முருகன் அங்கிருந்து பக்தர்களுக்கு அளவிலா அருள்பொழிகின்றான். பல அருளாளரின் பாதங்கள் பதிந்த மண் அது.

இவற்றுடன் சேர்ந்து நல்லூருக்குச் சிறப்புத் தருவது ஆலயத்தின் எழில் தோற்றம். அந்த அழகுக்கு மேலும் வண்ணம் சேர்ப்பதாகப் புதிய தெற்கு வாசல் திறக்கப்பட்டுள்ளது.

நல்லூரின் கிழக்கு நோக்கிய முகப்புத் தோற்றத்தை மட்டுமன்றி தெற்கு வாசலையும் படத்தில் பதிக்க வேண்டிய தேவை உண்டாகும் விதத்தில் தெற்கு வாசல் பொலிவு நிறைந்து காணப்படுகிறது.

இம்மாதம் 7 ஆம் திகதி மாலை புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட வாசலுடன் வசந்த மண்டபம் வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள மண்டபம் பெருந்திரளான பக்தர்கள் வசதியாக அமர்ந்து பூசைகளை பார்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

சுமார் 150 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டதான மண்டபத்தின் தூண்கள் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடியதாகவும் வண்ணக் குமிழ் விளக்குகள் பொருத்தப்பட்டும் அழகாக காட்சி தருகிறது 24 தேங்காய் எண்ணெய் விளக்குகளும் 32க்கும் அதிகமான மின் விளக்குகளும் இவற்றில் அடங்கும் இவ்விளக்குக் கூட்டத்தின் ஒளி மண்டபத்தில் கூடும் பக்தர்கள் மனதில் அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்துகிறது.

தீர்த்தக் கேணிக்கு அருகாமையில் உள்ள மண்டபமும் வாயிலும் சிதம்பரம் மதுரை மீனாட்சி அம்மன் கோயில்களின் மாதிரிகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளனவெனிலும் அவைகளிலும் பார்க்க சற்று விசாலமானதாக இது அமைந்துள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த காலங்களில் பயன் படுத்தப்பட்டு வந்த — கோயிலுடன் இணைந்ததான — தெற்கு வாசலும் தீர்த்தக்கேணியும் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் இராணுவ அசம்பாவிதங்களை அடுத்து மூடப்பட்டன.

எழிலார்ந்த புதிய தெற்கு வாசல் ஆலயத்துக்கு சிறப்பாக இருந்தபோதிலும்-

சுவாமி வெளிவீதி வரும் போது மேற்கு, வடக்கு வீதிகளைச் சுற்றி முன்றலுக்கு வராமல், தெற்கு வாசல் ஊடாக செல்வது உகந்ததா, சரியானதா என்ற சந்தேகம் பக்தர்களிடையே தோன்றியுள்ளது. பலரிடையே பரவலான அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

இந்தப் புதிய வழக்கத்தினால் நாட்டுக்கு, மக்களுக்கு மேலும் சோதனைகள் வேதனைகள் அதிகரிக்கக் கூடுமோ என்று கூட பக்தர்களில் பலர் அச்சம் தெரிவிக்கிறார்கள்

இது விடயத்தை அலசி ஆராய்ந்து, மீள் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்பட வேண்டிய ஒன்று என்பதே பலரது அபிப்பிராயமாகவும் உள்ளது. (ஆ-111)

# சுவீடன் ஒலிம்பிக் போட்டிக்கு தீவிரவாதக் குழு மிரட்டல்

ஸ்ரொக்ஹோம், ஒக. 15

2 ஆயிரத்து 4 ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை தடுத்து நிறுத்தப் போவதாக சுவீடனில் இயங்கும் தீவிரவாதக் குழு ஒன்று எச்சரித்துள்ளது.

ஸ்ரொக்ஹோம் நகரில் உள்ள ஒலிம்பிக் விளையாட்டு அரங்கில் கடந்த வாரம் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும்—

விளையாட்டு நிகழ்வுகள் சிலவற்றின் போது இடம் பெற்ற தீ வைப்புச் சம்பவங்களுக்கும் தாமே பொறுப்பு என்று 'சுவீடனைக் கட்டியெழுப்பும் குழு' என்ற பெயரிலான அந்தத் தீவிரவாதக் குழு உரிமை கோரியுள்ளது.

''எட்டு தீ விபத்துக்களும், குண்டு வெடிப்பும் எங்களது எச்சரிக்கையாகும். சர்வதேச ஒலிம்பிக் சபை தனது தீர்மானங்களை மாற்றும் வரை எங்கள் தாக்குதல்கள் தொடரும்''—என்று பொலீஸாருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# லதா மங்கேஸ்கரின் பாடலுக்கு எதிர்ப்பு!

புதுடில்லி, ஓக. 15

இந்தியாவின் சுதந்திர தினப் பொன்விழா நினைவாக நேற்று நள்ளிரவு நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் பிரபல ஹிந்திப் பாடகியான லதா மங்கேஸ்கர் பாடவிருந்த 'சாரே ஜஹாகே அச்சா' என்ற பாடலுக்கு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

அந்தப்பாடல் 'கனடா ரை' என்ற மேலைநாட்டுக் குளிர்பானத் தயாரிப்பு நிறுவனத்தின் விளம்பரத்தின் பெயரில் பாடப்படுவதாலே இவ்வாறு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

சுதந்திரத்துக்காக உயிர்த்தியாகம் புரிந்த தலைவர்களை நினைவுகூரும் நாளில், வர்த்தக நோக்கிலான சர்வதேச நிறுவனத்தின் விளம்பரக் களமாக நாடாளுமன்றம் மாற்றப்படக் கூடாது என்றும்—

அவ்வாறு செய்யப்பட்டால் நாடாளுமன்ற சிறப்பு அமர்வினைப் புறக்கணிப்போம் என்றும்— எதிர்க்கட்சிகள் எச்சரித்திருந்தன. (ஐ-5)

# 170 அடி நீள தேசியக்கொடி பாகிஸ்தானில் பறக்க விடப்பட்டது

இஸ்லாமாபாத், ஒக. 15

பாகிஸ்தானின் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களின் ஓர் அம்சமாக மிகப்பெரிய தேசியக் கொடி ஒன்று நேற்றுமுன்தினம் இஸ்லாமாபாத்தில் பறக்க விடப்பட்டது.

170 அடி நீளமுடைய இந்தக் கொடியை பாகிஸ்தான் விமானப்படையினர் வடிவமைத்து ஜனாதிபதி பாரூக் லெஹாரியிடம் வழங்கியிருந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று முன்தினம் தெருக்களில் கூடி ஆர்ப்பரித்து, ஆடிப்பாடி சுதந்திர மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இல்லங்களிலும், அலுவலகக் கட்டடங்களிலும் மின்னொளி அலங்காரங்கள் கண்ணைக் கவரும் வகையில் அமைந்திருந்தன.

நேற்று முன்தினம் நள்ளிரவு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தொலைக்காட்சி மூலம் நாட்டுமக்களுக்கு உரையாற்றினார்.

''உலக நாடுகளின் மத்தியில் பாகிஸ்தான் என்ற தனி நாடு என்றும் வெற்றிக்கொடி கட்டிப்பறக்கும்'' என்று அவர் முழக்கமிட்டார். (ஐ-5)

# 'பபிள் கம்' பிரியருக்கு அபராதம்

ஹொங்கொங், ஓக. 15

நீதிமன்ற விசாரணையின் போது 'பபிள் கம்' (Bubble gum) சுவைத்துக் கொண்டு கேள்விகளுக்கு பதிலளித்த வர்த்தகர் ஒருவர் 500 ஹொங்கொங் டொலர்களை அபராதமாகச் செலுத்தினார்.

ஹொங்கொங் நீதி மன்றம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பிரஸ்தாப நபரின் செயல் நீதிமன்றை அவமதிப்பதாகக் கருதிய நீதிபதி இந்த அபராதத்தை விதித்தார். (ஐ-5)

# ரஷ்ய அமைதிப் படை சண்டையில் தலையீடு?

துஷான்பே, ஒக. 15

தஜிகிஸ்தானில் சண்டையில் ஈடுபட்டுவரும் படைப் பிரிவு ஒன்றின் மீது விமானத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் துஷான்பேக்கு 100 கிலோ மீற்றர் தெற்கே உள்ள படைமுகாம் ஒன்றை இலக்கு வைத்துதே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

தஜிகிஸ்தான் சண்டையில் விமானங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும். ஆனால் தஜிகிஸ்தான் அரசிடம் விமானப்பிரிவு இல்லை. எனவே தஜிகிஸ்தானில் நிலைகொண்டுள்ள ரஷ்ய சமாதானப்படை விமானங்களே தாக்குதலை நடத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு புதிய ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தச்சன் தோட்டம் பிள்ளையார் கோயிலடி, கரவெட்டி மத்தி, கரவெட்டி. [48991]

### திருமண சேவை

டாக்டர், எக்கவுண்டன், ஆசிரியர்கள் என்னும் பல தரப்பட்ட தொழில் புரியும் மணமகன்கள் உண்டு. மாமி கல்யா மல்ரி சேவிஸ் 40/5, ரெம்பிள்றோட் லேன், சகல நாள்களிலும் 2 மணி வரை சந்திக்கலாம். திருவிளங்கம் (ரெயில்வே கடவைக்கு சமீபமாக). [48951]

### வாணி சோதிடம்

வாணி சோதிடம் மீண்டும் சேவையில் ஈடுபட்டுள்ளது. எம்மிடம் கைரேகை, ஜாதகம் குறிப்பு, நினைத்த காரியம், மனை வகுத்தல் போன்றவற்றுடன் திருமாங்கல்ய சேவையும் நடைபெறுகிறது. (தரகர் ஜாதகம் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) தொடர்பு; வாணி சோதிடம், 42, மருதடி வீதி, நல்லூர். சோதிடர் S கணேசன். [48983]

### உதவியாளர் தேவை

30 — 50 வயதுக்குட்பட்டவராகவும், நம்பிக்கையுடையவராகவும் வேறு பொறுப்புக்கள் இல்லாதவராகவும் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகளில் உதவி செய்வதற்கு ஒரு பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். தொடர்பு: திருமதி த. சந்தசாமி, 15/2, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் [48988]

---

குருவே துணை

## ஒன்று கூடல்



கதிர்காமத்தில் இருந்த சங்கைக்குரிய

### குருபாவா சுவாமிகள்

நல்லூர்க்கந்தன் பத்தாம் திருவிழா அன்று யாழ்ப்பாணம் வருவதாக அன்பர்களுக்குக் கொடுத்த வாக்குப்படி வந்து பல ஆண்டுகளாக அருட்பணி ஆற்றியது அறிந்ததே.

ஆண்டுதோறும் அத்திரு நாளைக் கொண்டாடுவது போன்று இவ்வாண்டும் 17 - 08 - 97 அன்று அவர் நிறுவிய ஆச்சிரமத்தில் திருவிழாக் கொண்டாடப்படும். அன்றையதினம் அன்பர்கள், அடியவர்கள், ஆதரவாளர்கள் அன்புடன் ஒன்று கூடுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

குருபாவா ஆச்சிரமம்

47, வங்கசாலை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(48963)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க

யாழ். கிளைக்குச் சொந்தமான

## லொறி

நியாமான வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். அரச, அரச சார்ப்பற்ற வர்த்தக நிலையங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளையுடன் தொடர்பு கொளளவும்.

- கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/1319)

---

## திருமண மணிவிழா



### கவிமாமணி ச. த. ஞானப்பிரகாசம்

(முன்னாள் அதிபர்)

திருமதி

### றெஜீனா மேரி மக்டலீன் நாகம்மா

(முன்னாள் உப அதிபர்)

இத்தம்பதிகளது திருமண மணிவிழா 16-8-97 சனிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு அல்வாய் தெற்கு இராணிமனை இல்லத்தில் நிகழ்வுறும்.

தலைமை:-
அருட்திரு. R. பீற்றர் துரைரத்தினம், O.M.I.
பங்குத் தந்தை - மிருசுவில்

சிறப்பு விருந்தினர்:-
அருட்திரு. அ. பெ. பெனற், O. M. I.
பங்குத் தந்தை — கரவெட்டி.

இராணிமனை, அல்வாய்.

(48949)

---

சாவகச்சேரி கல்வயல்

## ஸ்ரீ ஆயிலடி வீரகத்தி விநாயகர் கோயில்

(புலுட்டையன் பிள்ளையார்)

## மஹா கும்பாபிஷேகம்

கர்மாரம்பம்: 18 - 08 - 97 திங்கள் மாலை 6. 00 மணி

எண்ணெய்க்காப்பு: 21 - 08 - 97 வியாழன் காலை 8. 00 மணி முதல் மாலை 4. 00 மணி வரை

கும்பாபிஷேகம் ஆவணி 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
22 - 08 - 97 காலை 8. 00 மணி

பிரதம சிவாச்சார்யர் "வேதாகம சோதிட பூஷணம்"
சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் - கல்வயல்

சர்வபோத ஆச்சார்யர் "சிவாகம ஞானசாகரம்"
சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் - மட்டுவில்

சர்வசாத ஆச்சார்யர் "சம்ஸ்கிருதபண்டிதர்"
பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா (ஷெ கோயில் நித்ய அர்ச்சகர்)

ஆசியுரை வழங்குபவர்கள்:

★ "வித்யாசாகர" பிரம்மஸ்ரீ கி. சுப்ரமணிய சாஸ்திரிகள் - நல்லூர்;

★ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்யஸ்வாமிகள் - நல்லை ஆதீனம்;

சி. விவேகானந்தன்
ஆலய பரிபாலகர்

கல்வயல்

---

"களிற்றின் மாமுகப் பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்"

### ஓம் சரவணா

(சரவணாஸ்)

கோயில் உபகரணங்களின் நிறைவிடம்

### லிங்கம்ஸ்


அழகு சாதனங்களின் உறைவிடம்

கண்டிவீதி, சாவகச்சேரி.

[48979]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லத்துரை சிவானந்தம்

(நிலாவெளி, திருமலை.)

திருமலையில் பிறப்பு: 15 — 07 — 1960

அச்சுவேலியில் மறைவு: 27 — 07 — 1996

திதி: 15 - 08 - 1997

அறிவறிந்த நாள் முதலாய் - எம்மை
ஆசையாய் அணைத்து நின்று அன்பு
மழை பொழிந்து விட்ட - எங்கள்
அருமை அப்பா போன தெங்கே?
குணத்தில் குன்றாகி - எம்மை
குறைகள் இன்றி வளர்த்தவரே
காலமெலாம் வாழ்ந்தவரே - எம்மை
கலங்க விட்டுப் போன தெங்கே?

மனைவி, மக்கள்,
தந்தை, சகோதரர்.

பயிற்றோலை.
அச்சுவேலி தெற்கு.

(48972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில்லாலை
# புனித கதிரை மாதா
## திருநாள் வாழ்த்துக்கள்



சில்லையூர் ஆளுநி கதிரைச் செல்வியின்
கருணைத் திருவிழி நோக்கி
அவள் தம் ஆசியை இனிதிரந்து
வேண்டி நிற்கின்றோம்
நாம் மறவா நன் நாளாம்
ஆவணி 15 இலே

**SMILE PHOTO**
சிமைல் போட்டோ,
நானாட்டான் (மன்னார்).

(கி/ 1297)

---

## சில்லாலை புனித கதிரை மாதா பெருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

## சஜீவன்
## பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(49001)

---

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
# ஏல விற்பனை

மலை வேம்பு - மரக் குற்றிகள்
(MAHOGANY LOGS)
இடம்: மரக்காலை
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
சட்ட நாதர் வீதி,
நல்லூர்.
காலம்: 20 - 08 - 1997 காலை 10.30 மணி.

பிரதேச முகாமையாளர்.

(கி/ 1302)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பாசிரியர் திரு க. சபாநாயகம்
அவர்களின் தாயார்

## திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை

அவர்கள் இறைபதமடைந்து விட்டார்; அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன், அவர் தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆண்டு 11F மாணவர்கள்,
யாழ். இந்துக் கல்லூரி.

(48996)

---

## 500 குஞ்சுகள் விநியோகம்

தென்மராட்சி, ஓக. 15

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்திற்கு 500கோழிக்குஞ்சுகள் கடந்த செவ்வாயன்று கொண்டு வரப்பட்டு ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கோழி வளர்ப்போருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. (ஐ-117

## நல்லைக் குமரன் மலர் இன்று வெளியீடு

''நல்லைக் குமரன்'' மலர்-1997 வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா வழங்குவார்.

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நல்லூர் உற்சவ காலத்தின்போது இந்நூல் வருடாந்தம் வெளியிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## எவ். எம். அலை வரிசையில் பி. பி. சி.

கொழும்பு, ஓக. 15

பி. பி. சி. தமிழ், சிங்கள சேவை ஒலிபரப்புக்கள் நாளை சனிக்கிழமை முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன எவ். எம். மத்திய அலை வரிசைகளிலும் ஒலிபரப்பாக இருக்கின்றன. (இ-3-21)

## கால்நடை வளர்ப்போருக்கு பயிற்சி நெறி

தென்மராட்சி, ஓக. 15

தென்மராட்சி பிரதேச கால்நடை வளர்ப்போர்களுக்கான நான்கு நாள் பயிற்சி வகுப்புகள் கடந்த வாரம் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றன.

இப் பயிற்சி வகுப்பினை சாவகச்சேரி கால்நடை வைத்தியரும், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களும் நடத்தினர்.

இப்பயிற்சி வகுப்பில் தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து அதிக எண்ணிக்கையான கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டனர். (ஐ-117)

## 42 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 15

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 42-வது ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை சனசமூக நிலையத் தலைவர் வே. சின்னத்தம்பி தலைமையில் கைதடி தெற்கு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவில் நடைபெறும்.

விழாவையொட்டி கடந்த 11 ஆம் திகதி நடத்தப்பட்ட விவேகப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (ஐ-15)

## யாழ். பிரதம தபாலகம் இடம்மாறும்

தற்போது யாழ். பிரதான வீதியில் இயங்கும் பிரதம தபால் அலுவலகம் விரைவில் ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்டடம் ஒன்றுக்கு இடம் மாற்றப்படவுள்ளதாக [illegible] வரன் தெரிவித்தார். (ஐ-117)

---

# சில்லையூர் செல்வியின் திருநாள்



## பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி

நாலாபக்கமும் பயமும் பீதியும் நம்பிக்கையீனமும் நாளுக்கு நாள் தலை தூக்கும் நிலையிலுள்ள நம் அனைவருக்கும் சில்லையூர்ச் செல்வியாம் கதிரை அன்னையின் பரிவும் பாசமும் பரிந்து பேசலும் என்றும் நிறைவாய்க் கிடைக்கவும், நிம்மதி நிறைந்த வாழ்க்கைச் சூழல் எம்மிடை விரைவில் மலரவும் இந்நன்னாள் எமக்கு வழிசமைப்பதாக!

அருட்திரு. அ. அ. றொக்.

## கருணை மழைபொழியும் கதிரை அன்னை

இன்று ஓகஸ்ட் 15 ஆம் நாள் அகில உலகிலுமுள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரும் அன்னை மரியாள் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளை நினைவு கூர்ந்து விழாக் கொண்டாடுகின்றனர். அன்னையாம் திருச்சபை இந்த நாளை என்றும் நினைவு கூர வேண்டிய ஒரு நாளாகக் கொண்டு 1950 ஆம் ஆண்டு 12 ஆம் பத்திநாத பாப்பரசரால் விசுவாச சத்திய மாகப் பிரகடனம் செய்து அனைவரும் மரியாளை நினைவு கூர்ந்து அவள் காட்டிய பாதையில் வாழ அழைப்பு விடுத்துள்ளது.

ஆதியிலே இறைவன் உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்து அவற்றை ஆண்டு அனுபவிக்கும்படி மனிதனிடம் ஒப்படைத்தார். இறைவனுடைய அன்பின் மிகுதியை உணராத மனிதன் பாவம் செய்த போது அவனை மீட்பதற்கு ஒரு மீட்பரை வாக்களித்தார்: அந்த மீட்பர் ஒரு பெண்ணின் வழியாகவே இந்த உலகிற்கு அருளப்பட்டார். யாரிடம் இந்த மீட்பர் பிறப்பார் எனப் பலரும் எதிர்பார்த்திருந்த வேளையில் இறைவன் தமது தூதரை கலிலேயாவிலுள்ள நசரேத்து என்னும் ஊரில் வாழ்ந்த ஒரு கன்னிகையிடம் அனுப்பி அவளுடைய உதரத்திலிருந்து மீட்பர் பிறப்பார் என அறிவிக்கிறார். (லூக்: 26 - 38). அவளும் அதற்கு உடன்பட்டு ''இதோ ஆண்டவருடைய அடிமை'' எனத் தன்னைத் தாழ்த்தி இறை சித்தத்தை ஏற்றுக் கொண்டாள். அவளுடைய இந்த இறை சித்தத்தை ஏற்கும் பண்பினாலேயே மனுக்குலம் முழுவதும் மீட்பைப் பெற்றுக் கொண்டது.

அன்னையின் விண்ணேற்பு விழாவை அகில உலகும் கொண்டாடும் இந்த இனிய நாளில் அந்த அன்னையின் பாதுகாவலில் வாழும் சில்லையூர் மக்களும் தமது பாதுகாவலியாம் கதிரைச் செல்விக்கு விழா எடுத்து நன்றித்துதி சாற்றுகின்றார்கள். கடந்த 5 வருட இடப்பெயர்வு அனர்த்தங்களின் போதும் அன்னையவள் தம்முடன் உடனிருந்து செய்து வந்த அனைத்து நன்மைத்தனங்களையும் நன்றி நிறைந்த உள்ளத்துடன் நினைவு கூருகின்றனர்.

முத்திப் பேறு பெற்ற யோசவ்வாஸ் அடிகளாரின் விசுவாசத்தை நேரடியாகப் பெற்ற சில்லையூரானது இலங்கையின் வடமேற்குக் கோடியிலமைந்த ஓர் அழகிய கிராமமாகும். ''நெல்லாலை சூழ் சில்லாலை'' என்றும் ''மத்தியான வெயில் மண்ணிலே படா பல பழமரச் சோலை சூழ் சில்லாலை'' என்றும் பலராலும் போற்றப்படும் இக் கிராமம் இயற்கையாகவே எழில் கொண்டது. யாழ்ப்பாணம் வலி. மேற்கில் பண்டத்தரிப்பு கோவிற் பற்றில் அமைந்துள்ளது. பல் வளமும் பொழிந்து எல்லோரதும் நன்மதிப்பும் அன்பும் பெற்று அன்னை மாமரியை எந்நாளும் போற்றி இறைபக்திக்கும் விசுவாசத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கியமையால் ''சின்ன றோமை'' என்ற சிறப்புப் பெயரையும் தனதாக்கிக் கொண்டது.

இப்படியாகப் பற்பல நிலைகளிலும் விசுவாசத்திற்கு சான்று பகர்ந்து வாழ்ந்த சில்லையூர் மக்கள் அண்மைக்கால நாட்டு அனர்த்தங்களினால் நாட்டின் பல்வேறு இடங்களிலும் சிதறுண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு விரைவில் வந்து சேரவும், அன்னையின் அருளும், ஆசியும் எம்மக்களுக்கு எங்கிருந்தாலும் தொடர்ந்து கிடைக்கவும் வரம் வேண்டுவோம். எமது முன்னோர் போற்றிக் காத்த விசுவாசம் இன்றைய இளஞ்சந்ததியினரால் தொடர்ந்து பேணப்படவும், எமது நாட்டிலே உண்மையான அமைதி நிலவவும், தேவ அழைத்தல்கள் பெருகவும், மக்கள் அனைவரும் மனநிம்மதியுடன் வாழவும் எம் கதிரைச் செல்வி தமது அருளையும், ஆசீரையும் இன்றைய நாளில் எம்மீது பொழிந்தருள்வாளாக.

— கதிரை மாதா ஆலய சபையினர்.

(48994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பாடசாலைகளுக்கு யுனெஸ்கோ நிறுவனம் உதவி

யுனெஸ்கோ நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மந்துவில், கொடிகாமம், கைதடி ஆகிய இடங்களில் உள்ள பாலர் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்கவுள்ளனர்.

கொடிகாமம், மந்துவில் கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள இரு பாலர் பாடசாலைகளைப் புனரமைத்து இப் பாடசாலைகளில் மலகூடம், குடிதண்ணீர் வசதி அமைப்பதுடன் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் வழங்குவதற்கும்—

கைதடி மத்தி, கொடிகாமம் ஆகிய இடங்களில் உள்ள இரு பாலர் பாடசாலைகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா செலவில் மலகூடங்கள் அமைப்பதற்கும்—நிதி உதவி வழங்கவுள்ளதாகத் தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர். (இ-117)

# அங்கீகாரம் வழங்கப்பட்டும் அபி. வேலை இன்னுமில்லை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கண்டனம்

வலிகாமம் தெற்கு, ஒக. 15

பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டுத் திட்டத்துக்கு மாகாண சபையின் அங்கீகாரம் கிடைத்தும் சில திணைக்களங்கள் தமது அபிவிருத்தி வேலைகளை இன்னும் ஆரம்பிக்காதிருப்பதையிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் திணைக்களத் தலைவர்களை கண்டித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இக்கண்டனத்தை வெளியிட்டார்.

''பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களே மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டு ஆராயப்படும் என்பதால் சம்பந்தப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகள் கூட்டத்துக்குச் சமுகமளிப்பது அவசியம்.

பல திணைக்களப் பிரதிநிதிகள் கூட்டத்துக்கு சமுகமளிப்பதில்லை; உரிய முறையில் அனுமதியின்றி கூட்டத்துக்கு வராத தவறும் திணைக்களப் பிரதிநிதிகள் மீது எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

—இவ்வாறு பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ஐ-152)

## பாலர் பாடசாலை புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

அச்சுவேலி பத்தமேனி இளங்கதிர் சன சமூக நிலைய பாலர் பாடசாலையை புனரமைப்பதற்கு நிதி உதவி வழங்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இணங்கியுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த மேற்படி பாலர் பாடசாலைக் கட்டடத்தை அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இணைப்பாளரும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும் அண்மையில் பார்வையிட்டனர். (ஐ)

## நில அளவையாளர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 15

3 ஆம் வகுப்பு 2 ஆம் தர நில அளவையாளர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சை அடுத்தமாதம் 24 ஆம் திகதி கண்டியிலும் கொழும்பிலும் நடைபெறும் என்று திருகோணமலை நில அளவையாளர் அத்தியட்சகர் தெரிவித்திருப்பதாக யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-5)

# இலவச உள்ளீடுகள், உதவிகளுக்கு 2 ஆயிரம் விவசாயிகள் தெரிவு

யாழ். மாவட்டத்தில் உலக உணவு ஸ்தாபனத்தின் உதவி திட்டத்தின் கீழ் மரக்கறிச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக 2,000 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இலவசமாக விவசாய உள்ளீடுகளும், உதவிப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வலி. வடக்குப் பிரிவில் 750 பேரும் —
வலி. தெற்குப் பிரிவில் 300 பேரும் —
வலி. தென்மேற்கில் 150 பேரும் —
வலி. மேற்கில் 200 பேரும் —
வடமராட்சியில் 300 பேரும் —
வலி. கிழக்கில் 200 பேரும் —
தீவகப் பகுதியில் 100 பேரும் —
தென்மராட்சிப் பிரிவில் 100 பேரும் — தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசப் பிரிவுகளில் விவசாய சம்மேளனம் கிராம அலுவலர், விவசாய போதனாசிரியர் ஆகியோரினால் தெரிவு செய்யப்பட்டுப் பிரதேச செயலாளரினால் சிபார்சு செய்யப்பட்டுள்ள இந்த விவசாயிகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மரக்கறி விதைகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் தெரிவித்தார். (இ-135)


உ

**பிராமண இளைஞர் சமாஜம்**
**23 ஆவது ஆண்டு**
**வேதசிவாகம விழாவும்**
**பாராட்டு வைபவமும்**

மேற்படி விழா - 16 08 - 97 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் மட்டுவில் சம்ஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா அவர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள். அத்தருணம் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிராமண இளைஞர் சமாஜம்.

உரும்பிராய். (48990)



**மீண்டும் யாழ். நகரில்...!**

புதிய நிர்வாகத்தின் கீழ் மீண்டும்
15-08-97 அன்று தனது 37 வருட சேவையினை
தங்களுக்கு வழங்கி வரும் ஒரே ஸ்தாபனம்:

RM ESTD: 1960 J M J

**றேடியோ மனுவல்**

இல. 121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(48993)


## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



மண்ணில்: 06 — 04 — 1962

விண்ணில்: 16 — 07 — 1997

திருமதி
**டேவிட் றெஜினோல்ட் றெஜீனா**

இறைவன் திருப்பாதம் சரணடைந்த அவரின் ஆன்மசாந்திக்காக பரி. பரலோக அன்னை ஆலயம்—கரவெட்டியில் 16. 08. 97 [சனிக்கிழமை] அன்று மாலை 4 30 மணிக்கு திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர்களனைவரையும் இத்திருப்பலியில் பங்குபற்றி எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவில் வாடும்;
அன்புக் கணவர், தாய்,
பிள்ளைகள், சகோதரர்கள், மாமியார்,
வெளிநாட்டில் வதியும் உறவினர்கள்.

தற்காலிக முகவரி:
துரைசிங்கம் டேவிற்,
காளையன் தோட்டம்,
நெல்லியடி,
கரவெட்டி.

நிரந்தர முகவரி:-
K. K. S. [illegible]
பலாலி,
வசாவிளான்.

(சி/1317)

# பிறரன்புப் பணி செய்தமைக்காக விண்ணுக்கு உயர்ந்த மரியாள்

புனித மரியாள் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை இன்று உலகெங்கிலுமுள்ள கத்தோலிக்க மக்கள் நினைவுகூருகின்றனர். சிறுவயது தொட்டு பொறுமை, தாழ்ச்சி, அன்பு என்னும் அருங் குணங்களின் நெறி நின்று வாழ்ந்தவள் மரியாள். மண்ணைப்போல் பொறுமை வளர்த்துத் தன்னைத் தாழ்த்திக் கொண்டதனாற்றான் மரியாள் இன்று விண்ணுக்கு உயர்த்தப் பட்டிருக்கிறாள். ஒட்டு மொத்தமாகச் சொல்லப்போனால் ''இதோ ஆண்டவருடைய அடிமை'' என்ற பணிவில் முதிர்ந்த அவளின் வார்த்தைகள் மூலம் இறையன்புக்குரியவளானாள்.

ஏழ்மை வாழ்வுக்குத் தன்னை அவள் அர்ப்பணித்துக் கொண்டாள். மீட்பராம் கிறிஸ்துவின் பிறப்புக்கோலம் அவளின் எளிமை வாழ்வுக்குக் கோடி காட்டுகின்றது. ஆடம்பர வாழ்விலிருந்து எப்போதுமே துருவப்பட்டு நின்றவள் அன்னை மரியாள். தேவகுமாரன் கிறிஸ்துவைப் பாடுகளுக்குக் கையளித்துத் தியாக இமயமாக அவள் விளங்குகின்றாள். இதனாற்றான், மரியாளின் புகழுக்கு இங்கே மரணமில்லை என்று கூறுவர் மறை நூலறிஞர்.

கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வில் கூட அவர் முன்னெடுத்துச் சென்ற இலட்சியப் பயணத்தில் பங்காளியாக நின்றவள் அவள், தூய்மையுடன் கூடிய மக்களின் தொண்டு வாழ்வையே தனது காத்திரமான பணி என்று எண்ணினாள். விவிலிய நூலிலே வரும் கானாவூர் [illegible] மரியாளின் நாடிபிடித்துப் பார்க்கும் பிறரன்பைத் துல்லியமாகக் காட்டும். பிறருக்காக வாழ்வதனால் தான் முகங்கொடுக்க வேண்டிய துன்பங்கள் குறித்து மரியாள் என்றுமே கவலைப்பட்டதில்லை.

தாயன்பை இதயத்திலே நிறைத்துக் கொண்ட அவள் தாய்மையென்ற உணர்வின் தளத்திற்கு நம்மையெல்லாம் இட்டுச் செல்கின்றாள். தாய்மை என்பதிலும் மேலானதொரு செல்வத்தை உலகம் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை என மகாகவி தாகூர் சொல்லியதை இவ்வேளை நாம் மனங்கொள்ள வேண்டும். என்றுமே வரலாறு கண்டறியாக் கொடூரமான கல்வாரிப்பலியிலே, அன்புச்சீடன் அருளப்பர் மூலமாக மனுக்குலம் முழுவதற்குமே மரியாளை தாயாக்கினார் இயேசு.

பிறரன்புப்பணி செய்தமையாற்றான் மரியாள் இப் பெரும்பேறு பெற்றாள்.

நம் மண்ணிலே இன்று வாழ்வே பெருஞ்சுமையாகி விட்டது. வீடுகளிலே அவலங்களை, பட்டினிகளை, இழப்புக்களைச் சந்திக்காத நேரமில்லை. அகதி வாழ்க்கையே நமக்குச் சொந்தம் என்றாகிவிட்டது. உண்மையும், நீதியும் எங்கோ உறங்கிவிட்டதைப் போன்றதொரு நிலை. இத்தனைக்கும் நம்மிடையே மனத்தூய்மை இருக்கின்றதா? நம் செயல்கள் போற்றக்கூடியவையாக இருக்கின்றனவா? இல்லையே, சுயநலத்தையே எங்கள் நெஞ்சினில் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றோம். இவ் வேளையில் தான், மரியாள் வாழ்ந்து காட்டிய பாதையை நாம் உற்று நோக்கவேண்டும். அயலவனில் அவள் மகன் கிறிஸ்துவைக் காணுகின்ற அன்புணர்வு நம்மிடையே உயிர் பெற்றெழ வேண்டும்.

மரியாள் கண்ணெனப் போற்றி வளர்த்த அடக்கம், பிறரன்பு, அர்ப்பணிப்பு போன்ற குணநலன்களை நாமும் கைக்கொள்ள வேண்டும். மாற்றானைக் கூட முகஞ்சுளிக்காமல் ஏற்றுக் கொள்ளும் பண்பில் நாம் வளர வேண்டும். நம்மை நெறிப்படுத்திக் கொண்டு இதயத்திலே பின்னிக்கிடக்கின்ற சுமைகளை, ஏக்கப் பெருமூச்சுக்களை கன்னிமை குன்றாத அத்தாயிடம் சொல்லியழ வேண்டும். தாய்மையின் தேனூற்றான மரியாள் நிச்சயம் நமக்குத் துணையிருப்பாள்.

தீக்குளிக்கும் நம் நெஞ்சத்து நினைவுகளையும், வாடி வேர்கருகி நிற்கும் எதிர்பார்ப்புகளையும் அவள் அறியாதவளல்ல. இதனாற்றான் ''உம்மை நாடி வந்து கைவிடப்பட்டவர்கள் உலகத்திலில்லை'' என்று புனித பேர்ணாட் மரியாளைப் புகழ்கின்றார்.

நமது சஞ்சலங்களை, சிலுவையேற்றங்களை, நசிந்த உணர்வுகளை, நெஞ்சக் குமுறல்களையெல்லாம் நம்பிக்கையோடு அவளின் காலடித்தாமரையில் சமர்ப்பிப்போம். அருள் தருவாள் அந்த அன்னை. அந்த உலக மகாநாயகியை, உத்தம வார்த்தையைச் சுமந்தவளை மரியே! போற்றியென வாழ்த்தி நிற்போம். அவளின் மாசணுகாச் சந்நிதானத்தில் சிரமே தாழ்த்தி நிற்போம்.

- மு. சிங்கராயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பாதை திறப்பும் அடைப்பும்

வடக்கு - கிழக்கில் போர் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, மறுபுறம் பாதைகளைத் திறப்பது குறித்து பிரஸ்தாபிக்கப்படுகிறது.

வவுனியா — கிளிநொச்சி நெடும்பாதையைத் திறப்பதற்காகவே அரசாங்கப் படைகள், நல்ல நாள், சுப வேளை எல்லாம் பார்த்து மூன்று மாதங்களுக்கு முன்னர் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தன. ஆனால் நெடும் பாதையின் மூன்றில் ஒரு பகுதிக்குக் (சற்றுக்) குறைவாகவே இராணுவம் இதுவரை முன்னே நகர்ந்துள்ளது.

இராணுவத்தின் பாதை திறப்பு நகர்வு ஆமை வேகத்தில் நடைபெற, வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான தாண்டிக்குளம் ஊடான மக்களின் போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுவிட்டது. அதனால் மேற்கூறிய இரு மாவட்டங்களுக்கும் இடையில் மக்கள் போக்குவரத்துக்கென புதிய பாதை ஒன்றைத் திறப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. சிவில்நிர்வாக அதிகாரிகள் இதன் பொருட்டு படைத்தரப்பினருடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுநடத்தி வருவதாகத் தகவல்.

இதேபோன்று, மன்னாருக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவது குறித்து— தடங்கலற்ற கடற்பாதையை திறப்பது குறித்து— அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக அதிகாரிகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி வருகிறார்கள்.

இதேவேளை, காங்கேசன் துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் பாதை கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக ''அடைக்கப்பட்டுள்ளது.'' இந்தப் பாதையைத் ''திறப்பதற்கு'' வழித்துணை வழங்குவது சாத்தியமில்லை என்றுசெஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவித்திருக்கிறது. கரையிலிருந்து நாற்பது மைல் தொலைவில் கடற்படைப் பாதுகாப்புடன் கப்பற் சேவை எப்போது நடைபெறும் என்ற நிச்சயமின்றி (இடம் பெயர்ந்தவர்கள் உட்பட) மக்களின் கடற்பயணம் தடைப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் போக்குவரத்துப் பாதைகள் தடைப்பட்டுள்ளன ஆனால் பாதையைத் திறப்பதற்கென்று அரசு ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை பி.பி.சி. செய்தியாளர் குறிப்பிட்டது போல ''வெற்றி அழிவு'' ஆகியுள்ளது.

போரில் ஈடுபட்டுள்ள இராணுவம், விடுதலைப் புலிகள் தரப்புகளில் மட்டுமின்றிப் பொது மக்கள் தரப்பிலும் பெரும்உயிரிழப்புகளை உண்டாக்கியுள்ளது. உடைமை அழிவுகளும் பெருவாரியாக இடம் பெற்றுள்ளது.

ஒரு பாதையைத் திறப்பதற்குப் புறப்பட்டு, பல பாதைகளை மூட வேண்டியும், பெரும் உயிர், உடைமை இழப்புகளை உண்டாக்கியும் எதிர்மறையான விளைவைப் பெறுவதற்கு போர் ஒன்று தேவைதானா?

இதனால் நஷ்டமும் கஷ்டங்களும் நாட்டுக்கும் மக்களுக்குமே என்பதனை உணர்ந்தால் அரசு இந்தப் போரை நடத்துமா? போர் தொடர்வதன் அர்த்தம்...? மக்கள் நலனில் அக்கறை இல்லை என்பதால் தானே...!

# காணாமற்போனோர் தொடர்பான விசாரணை

காணாமற் போனோர் தொடர்பாக அவர்களது பெற்றோர் அச்செழுவிலுள்ள 51 ஆவது படையணிக்கு அனுப்பி வைத்தமுறைப்பாடுகள் குறித்து யாழ்ப்பாணம் ஞானம்ஹோட்டலில் அமைந்துள்ள 512 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் இம்மாதம் 16 ஆம், 17ஆம் திகதிகளில் விசாரணைகள் நடைபெற வுள்ளதெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முறைப்பாடுகளை மேற்கொண்டோரில் சிலரின் தற்போதைய விலாசத்தை கண்டறிய முடியாத காரணத்தினால் கீழ் குறிப்பிடப்பட்ட கைதானோரின் உறவினர்களை மேற்குறிப்பிட்ட திகதிகளில் ஞானம் ஹோட்டலில் நடைபெறும் விசாரணைகளுக்கு சமுகமளிக்குமாறு 51 ஆவது படையணி தெரிவித்துள்ளது:

★ கந்தையா சந்திரசேகரன் (சுழிபுரம்)
★ ஜீவனையா மதியழகன் (தொல்புரம்)
★ முருகையா ரமேஸ்குமார் (அரசடிச் சந்தி யாழ்.)
★ குணரட்ணம் பிறேம்குமார் (கொட்டடி)
★ சின்னத்தம்பி சிவராஜா (பண்டத்தரிப்பு)
★ சுப்பிரமணியம் குமார் (வட்டுக்கோட்டை கிழக்கு)
★ மகேந்திரன் சுரேந்திரன் (கொக்குவில் கிழக்கு)
★ மாணிக்கம் நாகநந்தினி (அராலி)
★ குமரன் சச்சிதானந்தசிவம் (தொல்புரம் மேற்கு)
★ சரவணபவான் கௌதமன் (நாச்சிமார் கோயிலடி)
★ நடேசு இந்திரகுமார் (செட்டியார் மடத்தடி அரியாலை.)
★ அரியாம்பிள்ளை யோகராஜா (செட்டியார்மடம், வட்டுக்கோட்டை.)
★ சுப்பிரமணியம் பத்மினி (செட்டியார்மடம், வட்டுக்கோட்டை.)
★ நடேசு கிருஸ்ணமூர்த்தி (சுழிபுரம்.)
★ கிருஸ்ணமூர்த்தி கௌரியால்ஸ்ரீ (சுழிபுரம்.)
★ பரமேஸ்வரன் குமுதினி (சங்கரத்தை, வட்டுக்கோட்டை.)
★ பரமேஸ்வரன் பரணிதரன் (வட்டுக்கோட்டை.)
★ செல்வன் தெய்வேந்திரம் (தொல்புரம் கிழக்கு)
★ சிவரட்ணம் நரேந்திரன் (கொக்குவில் கிழக்கு)
★ நற்குணம் மனோரஞ்சன் (மானிப்பாய்)
★ கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் (பொற்பதி வீதி. கொக்குவில்.)
★ தங்கராஜா மைதா
★ சண்முகநாதன் மோகனரூபன் (திருநெல்வேலி)
★ தம்பு மகேந்திரன்.

# இன்றுவரலட்சுமி விரதம்

'கணவனே கண் கண்ட தெய்வம்' என்று வாழும் கற்புடைய மகளிர் தம் மாங்கல்ய பாக்கியம் நிலைக்க வேண்டுமென்று அனுட்டிக்கும் விரதம் வரலட்சுமி விரதம் ஆகும்.

இந்த விரதமானது ஆவணி மாத பூரணைக்கு முந்திய வெள்ளிக் கிழமையிலே அனுட்டிக்கப்பட வேண்டிய விரதமாகும்.

இந்த விரதம் பற்றிய ஒரு கதையுண்டு.

ஒரு நாள் பார்வதி சமேதராகப் பரமேஸ்வரர் திருக்கைலாய மலையிலே வீற்றிருந்தார். அவ்வேளை என்றுமில்லாதவாறு உமாதேவியார் திடீரென எழுந்து சிவனை மும்முறை வலம் வந்து வணங்கி ''என்பிராண நாயகரே! ஐயனே! இந்தப் பரந்த நிலவுலகின் கண்ணே சகல ஐசுவரியங்களையும் சௌபாக்கியங்களையும் செல்வ போகங்களையும் சுவீட்சமான நல்வாழ்வையும் தரக்கூடிய விரதம் எது வென்று உரைத்தருள வேண்டும்?'' என்று தாடபணிந்து வினவினார்.

அதற்குப் பரமசிவனார் ''தேவி! நல்ல கேள்வி கேட்டாய் இதோ விடை'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

முன்னொரு காலத்திலே குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்று அழைக்கப் படுகின்ற பெண்ணொருத்தி வாழ்ந்து வரலாயினாள். அவள் நல்ல தெய்வ பக்தியும் ஆசாரமும் உடையவள் ஒரு நாள் அவளுடைய கனவிலே வரலக்ஷ்மி தேவி காட்சியளித்தாள் அப்பொழுது அவளுக்கு இவ் விரத மகிமையை உபதேசித்து மறைந்தருளினாள் அவளோ உடனே தனது தோழிப் பெண்களுக்கு இவ் வதி சயத்தைக் கூறினாள் அது கேட்ட அவர்கள் இந்த விரதத்தை முறையாக அனுட்டிப்பதாக சங்கற்பம் எடுத்தனர்.

உரிய நாளிலே விரதத்தை முறைப்படி அனுசரித்தனர். வாழ்வில் சந்தோஷமும் குதூகலமும் பொங்கியது.

இடத்தைச் சாணகத்தினால் மெழுகிக் கோலமிட்டு மாவிலை, பூச்சாரம், தோரணங்களினால் அலங்கரித்து மண்டபத்தின் மையப் பகுதியில் தாமரைக் கோலத்தின் மேல் அரிசியைப் பரப்பிக்கும்பம் வைத்தல் வேண்டும்.

பொதுவாக நிறைகுடம் வைப்பதற்கு நீர் நிரப்பியே வைப்பார்கள் ஆனால் இந்த வர லக்ஷ்மி பூஜைக்கு பச்சரிசி நிரப்பிக் கும்பம் வைத்தல் வேண்டும்.

நல்ல கழி நூலிலே மஞ்சள் பூசி ஒன்பது இழைகளால் முறுக்கி ஒன்பது முடிச்சுக்கள் முடிந்து இக்காப்பினைக் கும்பத்தில் வைத்துப் பூசை தொடங்கப்படும்.

விசேஷ பூசை செய்து உபசாரமிட்டு ஒன்பது நாமத்தால் ஒன்பது முடிச்சுக்களையும் அர்ச்சித்து அந்த நூலை வலது கையிலே கட்டுதல் வேண்டும். விரதம் எல்லாவற்றுக்கும் காப்புக் காட்டும் போது ஆடவர் வலப்பக்கமும் வனிதையர் இடப்பக்கமும் கட்டுவது வழக்கம். ஆனால் இந்த வரலக்ஷ்மி விரத பூசைக்கு மாத்திரம் பெண்கள வலக்கையிலே காப்புக் கட்டுவார்கள்.

ஒன்பது முடிச்சுக்களுக்கும் கமலா, ரமா, லோகமாதா, விஸ்வஜனனீ, மகாலக்ஷ்மி, க்ஷிராப்பதி தநயா, விஸ்வ, ஸாக்ஷிணீ, சந்ரஸகோதரி, ஹரிவல்லபா ஆகிய நாமங்கள் உரியனவாகும். ஆனால் இதை உச்சாடனம் செய்யும் போது ஒவ்வொரு நாமத்துக்கும் முன்னே 'ஓம்' என்னும் இறுதியில் 'நம' என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த விரதம் அனுட்டிப்பவர்கள் விசேஷ நைவேத்தியமாக நெய்யிட்டுச் செய்த பொங்கல் படைக்க வேண்டும். விசேஷமாக அறுகு எடுத்துப் பூஜை செய்தல் வேண்டும்.

மத்தியானம் ஒரு பொழுது அமுதுண்டு அடியார் ஒருவருக்கு மகேஸ்வர பூஜை செய்து விரதம் பூர்த்தி பண்ணலாம். இந்த விரதத்தை ஒன்பது வருடங்களுக்குத் தொடர்ச்சியாக அனுஷ்டிக்க வேண்டும். அப்போதுதான் பூரண பலன் கிட்டும்.

## ஞானக்கதிர்

வீடுகளில் வரலட்சுமி பூஜை செய்ய முடியாதவர்கள் ஆலயங்களுக்குச் சென்று சரடு கட்டியதும் போசனம் செய்யலாம்.

சுமங்கலிப் பெண்கள் தாம் தீர்க்க சுமங்கலியாக வாழ்வதற்கு இந்த விரதத்தை அனுட்டித்து உய்தி பெறுவார்கள்.

— இராசையா ஸ்ரீதரன்

## நாளை

**ஆடி 31**

சனிக்கிழமை

திதி: திரயோதசி முன்னிரவு 9.48 வரை.

நட்சத்திரம்: பூராடம் காலை 6 23 வரை;

உத்தராடம் அதிகாலை 5.20 வரை.

சனிப்பிரதோஷ விரதம்

சுபநேரம்: 3.05 - 4.35

ராகுகாலம்: 9.05-10.35

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## நல்லருள் புரிவாய் போற்றி!

கந்தனே கடம்பா காலகாலனின் குருவே போற்றி
செந்தமிழ்க் குமரா செங்கண் மாலவன் மருகாபோற்றி
அந்தநாள் அமரர்க்காக அசுரரை அழித்தாய் போற்றி
நற்தமிழ் மக்காட்காக நல்லருள் புரிவாய் போற்றி

கலியுக வரதா கானக் குறத்தி நாயகனே போற்றி
பொலிவுற மயிலேறிப் பூவலம் செய்தாய் போற்றி
வலியுள பகையையோட்ட வேலினைக் கொண்டாய் போற்றி
நலிவுறு தமிழர்க்காக நல்லருள் புரிவாய் போற்றி

[illegible]

உ

மீசாலை திருநீலகண்ட

## வெள்ளைமாவடி பிள்ளையார் கோயில்

## மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா

காலம்: **16 - 08 - 1997** சனிக்கிழமை பகல் 11 மணி

இடம்: **கோயில் மண்டபம்**

தலைவர்: **திரு. ஐ. மாணிக்கவாசகர் அவர்கள்**
(தலைவர் திருப்பணிச்சபை, தருமகர்த்தா சபை)

நிகழ்ச்சி நிரல்

மலர் அறிமுகம்: திரு சோ. கணேசலிங்கம் அவர்கள் [மலராசிரியர்]

மலர் ஆய்வுரை: திரு த. நாகேஸ்வரன் அவர்கள் [ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி]

முதற்பிரதி வழங்கல்: சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள் [ஆலய பிரதம சிவாச்சாரியார்]

முதற்பிரதி பெறுதல்: பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் [பிரதேச செயலர், தென்மராட்சி]

நன்றியுரை: திரு அ. கயிலாயபிள்ளை அவர்கள் [செயலாளர், திருப்பணிச்சபை]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/1320) திருப்பணிச்சபை

## வாழ்த்துகின்றோம்

யாழ். அரச செயலக ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும் யாழ்ப்பாணம் நீதிநிர்வாக மாவட்ட சமாதான நீதிவானும், பல பொதுநல நிறுவன சமூக சேவையாளருமாகிய 'சமூக இரத்தினம்' கோப்பாய்

**உயர்திரு. எம். கே. இளையப்பு**

அவர்களின் எழுபத்தோராவது (71) அகவை **12-08-97** ஆம் திகதி ஆரம்பமாகியதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். அவரது சமூக சேவைப்பணி தொடரவும், சமாதான நீதிவான் பதவி பெருமையடையவும் உடல்நலம் மற்றும் பிறவளம் அனைத்தும் பெற்று நீடு வாழவும் வாழ்த்துகின்றோம்.

அன்புள்ளங்கொண்ட நண்பர்கள்

(48998)

## புடைவை நிறுவனத்திற்கு ஊழியர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புடைவை நிறுவனத்திற்கு குறைந்தது மூன்று வருட அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் தேவை.

**16 — 08 — 1997** 11.00 மணிக்கு

தொடர்பு கொள்ளவேண்டிய இடம்:

**தம்பிஐயா அன் கோ**

**62/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(49002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாயில்

# இன்னிசை நற்செய்தி பெருவிழா!

உலகப் பிரசித்தி பெற்ற பாடகர்

## அருட்தந்தை பேர்க்மான்ஸ்
அவர்கள்

இடம்:- செல்லமுத்து விளையாட்டு மைதானம் மானிப்பாய்
நாள்:- இன்றும் நாளையும் (ஓகஸ்ட் 15 - 16)
நேரம்:- தினமும் 3 - 30 (புதிய நேரம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசம் இலவசம்!

(48958)



## MODERN EDUCATION CENTRE
KARAVEDDY

**A/L 98, 99**

★ மின்னியல்
★ புலங்கள்

ஆரம்பம்: 15 - 08 - 1997
வெள்ளி பிற்பகல் 3 மணி
ஆசிரியர்:- திரு. குமரன்.

(சி/ 1310)


# கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பளைமாவட்ட வைத்தியசாலையில் தொலைபேசி இயக்குநராகக் கடமையாற்றிய

## திரு. சிதம்பரம் அமிர்தலிங்கம்
அவர்கள்

12 - 08 - 1997 செவ்வாய்க்கிழமை திடீர் மரணமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அவரது பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட வைத்திய அதிகாரியும்,
வைத்தியசாலை ஊழியர்களும்,
மாவட்ட வைத்தியசாலை,
தெல்லிப்பளை.

(47384)

# மரண அறிவித்தல்

## அகுஸ்த்தீன் செபமாலை
(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம், இல. 11 கதிற்றல் வீதியை இருப்பிடமாகவும் கொண்ட அகுஸ்த்தீன் செபமாலை 13-08-97 புதன்கிழமை தனது 80 ஆவது வயதில் காலமானார்.

இவர் திருமதி அஞ்சலீனாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ் சென்ற செல்வன் அருட்பிரசாதம், திருமதி மேரி மல்லிகா (ஆசிரியை, Dip. in Edu. புனித பத்திரிசியார் கல்லூரி), அருள் பிரகாசம் (E Eng. Tech. Lond, இத்தாலி), அருளானந்தன் (கொம்பியூட்டர் இயக்குநர், ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சூ. ஜோன் அரியதாஸ் (பொருத்துநர்), திருமதி தா. ஆன் ரெபேக்கா (இத்தாலி), திருமதி க. ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வன் அ. ஆன்ஸ்ரனின் (இத்தாலி) அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான கத்தரீனா, லேனம், பிரான்ஸிஸ், மதலேனம், சுவானம், எலிசபேத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக மேற்படி இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை 16-8-97 சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு (இலங்கை நேரப்படி) யாழ். மரியன்னை தேவாலயத்தில் பூசைப்பலியுடன் புனித கொஞ் செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

இல. 11, கதிற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

(49012)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

# இராஜகோபால் நினைவு விழா

யாழ்ப்பாணம் ஓக. 15

முதுபெரும் பத்திரிகையாளரான அமரர் தமிழ்மணி பொன். இராஜகோபாலின் நினைவஞ்சலி விழா இம்மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மு. ப. 10 — 00 மணிக்கு வட்டுக்கோட்டை சிவன் மேலை வீதியில் இடம்பெறவுள்ள பிரஸ்தாப நினைவு விழாவில் பத்திரிகையாளர்கள், கலையாளர்கள் மற்றும் அபிமானிகள் கலந்து கொண்டு உரையாற்றுவர். (அ)

# கூடைப்பந்தாட்ட இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்பட்டு வந்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை பல்கலை ஆடுகளத்தில் நடைபெறவிருக்கிறது.

இறுதி ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ மாலை 3 மணி — பெண்கள் பிரிவில் — யாழ். பல்கலைக் கழக அணி எதிர் பெமிலியன் அணி.

★ மாலை 4 மணி — ஆண்கள் — யாழ் பல்கலைக்கழக கோல்ட் அணி எதிர் உதயன் வி.க. அணி.

இறுதி ஆட்டத்துக்கு யாழ். பல்கலைக் கழக கல்வியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. சின்னத்தம்பி பிரதம விருந்தினராகப் பங்கு பற்றுகிறார். (இ-3)

# டொனால்ட் வெற்றிக்கேடய போட்டி

யாழ்ப்பாணம் ஓக. 15

டொனால்ட்க்ணேசகுமார் வெற்றிக் கேடயத்துக்கான சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்துகின்ற 8 ஆவது ஆண்டு கிரிக்கெட் போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். (இ-5)

# 23 ஆவது வருட வேத சிவாகம விழா

யாழ்ப்பாணம், ஓக. 15

பிராமண இளைஞர் சமாஜம் நடத்தும் 23 ஆவது ஆண்டு வேத சிவாகம விழாவும், பாராட்டு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் யாழ். பல்கலைக் கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கி. சதாசிவக் குருக்கள் இவ் விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப் படவுள்ளார்.

நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள், தர்ம சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (ஐ)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டது.

இம்மோதலில் தமது தரப்பில் 2 கடற்புலிகள் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

இத்தாக்குதலை அடுத்து அதிகாலை 3-30 மணியளவில் முல்லைத்தீவுப் பகுதிக்கு வந்த கடற்படைக் கப்பல்கள் புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்திய போதும் அவை தப்பிச் சென்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-164)

# மரண அறிவித்தல்கள்

## வீரகத்தி சத்தியசீலன்
(சைக்கிள் திருத்துநர், தபாற்கட்டைசந்தி)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சத்தியசீலன் 12-08-97 இல் காலமானார்.

இவர் வீரகத்தி முத்து தம்பதிகளின் மகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தகுமாரின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும், பாமாவின் அன்பு மாமனாரும் ஜெபகரின் அன்புப்பேரனும், இந்திராணி, குகராசா, தவராசா, ராசாத்தி ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் கடங்குகள் 12-08-97 இல் அரியாலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
லோகேஸ்வரி
(மனைவி)

(சி/1321)

## செல்லப்பா ஜெயபாலன்

செல்லப்பா ஜெயபாலன் முன்னாள் பணிப்பாளர் (Enviromental Laboratories Ltd, Colombo) 10- 08- 97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியைதிருமதி புண்ணியவதி (புஸ்பம்) அவர்களின் அன்புக்கணவரும், காலஞ் சென்ற செல்லப்பா, திருமதி பாக்கியம் அவர்களின் பாசமிகு மகனும், திருமதி இரத்தினேஸ்வரி (ஆசிரியை), காலம்சென்ற சிறீசரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாரந்தனை வடக்கைச்சேர்ந்த திரு சிதம்பரப்பிள்ளை, திருமதி சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், திரு. தனபாலசிங்கம் (றொமிக்கோ இன்டஸ்றீஸ்), பரமேஸ்வரி, நகுலாம்பிகை, இராஜேஸ்வரி, திரு. நல்லராசா (U.K.) கருணாதேவி, சகுந்தலாதேவி (இலங்கை துறைமுக அதிகார சபை), வசந்தா (அரசினர் வைத்திய சாலை ஊர்காற்றுறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஐயம்பிள்ளை (சோதி), ஐயாத்துரை, குபேந்திரன், விக்னேஸ்வரி, ஜீவானந்தம் (உணவுக்கட்டுப் பாட்டுத் திணைக்களம்), சண்முகேஸ்வரன் (இலங்கை துறைமுக அதிகார சபை), உதயநாதன் (பாலியல் நோய் தடுப்பு நிலையம் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும், சுதாகர், திவாகர், சாந்தினி, சிறீ (சுவிஸ்), விஜி (சுவிஸ்), குமு (சுவிஸ்), ரவி (இத்தாலி, சுபத்தி, பபி (கனடா), சுகந்தன், முகுந்தன், (U.K.) ஜெயிந்தன், சுஜி, சுமா, றஜி, மிது, தனு, பானு, சாயிஜா, விபி, துளக்ஷன், அக்ஷியா ஆகியோரின் பெரியதந்தையும், தாரணி, ஆராணி, கிருஷ்ணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஜீத், சௌமியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13-08-97இல் புதன்கிழமை பகல் 12. 00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. உதயநாதன்
(சகலன்)

24, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(49017)

## செல்வன் ஜெகநாதன் ஜெயக்குமார்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் ஜெகநாதன் ஜெயக்குமார் 10- 08- 97 இல் ஜேர்மனியில் அகால மரணமானார்.

இவர் நவாலியைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் ஆறுமுகம் நாகமுத்து அவர்களின் அன்புப் பேரனும், பருத்தித்துறையைச் சேர்ந்த ஆ. வ. பரமலிங்கம் [கட்டட ஒப்பந்தகாரர்], காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் பாசமிகு மூத்த பேரனும், ஜேர்மனியில் வசிக்கும் ஜெகநாதன் [முன்னாள் ஆசிரியர், அப்புத்தளை], தங்கமலர் ஆகியோரின் பாசமிகு மூத்த புதல்வரும், கலைக்குமார், சுரேஸ்குமார், உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரனும், திருமதி சு. செல்வமனர் [அதிபர் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை], திருமதி நா. திலகமனர், இன்பமலர் [ஆசிரியை, யா/வட இந்து மகளிர் கல்லூரி, அன்புமலர் [ஆசிரியை, யா/வல்லை மகளிர் ம. வி.], சுந்தரேசன் [விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்], நாகராசா, நவாலியைச் சேர்ந்த டாக்டர் அரசர்க்கோன் [உயிலங்குளம்], டாக்டர் அமிர்தநாதன், ஸ்ரீஸ்கந்தராசா [லண்டன்] அவர்களின் அன்புப் பெறாமகனும், பருத்தித்துறையைச் சேர்ந்த சித்திரவேலாயுதம் [பொலீஸ் சார்ஜண்ட், வவுனியா], தங்கவேலாயுதம் [சுவிஸ்], செந்தூர் வேலாயுதம் [கொழும்பு], திருமதி சி. லோகேஸ்வரி [ஆசிரியை, வவுனியா], திருமதி த. சுபோதினி [சுவிஸ்], நவாலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி ந. குலமணி, திருமதி சு. வாகீஸ்வரி [இளைப்பாறிய ஆசிரியை, கொ/முகத்துவாரம் இந்து கல்லூரி, ஆகியோரின் அன்பு மருகரும், சுதர்மன் [மாணவன் வவுனியா ம. வி.] காலஞ்சென்ற சுதர்சன், மகிழ்தினி, சியாமினி மாணவிகள் [வவுனியா கன்னியர் மடம் ம. வி.], மணிமாறன் [சுவிஸ்], மணிபரன் [சுவிஸ்] சரண்யா [கொழும்பு] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14 - 08 - 1997 அன்று ஜேர்மனியில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திரு. ஆ. வ. பரமலிங்கம்

"சரஸ்வதி வாசா"
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(49010)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சு மனையில் 15-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org